தொகுதி-௫௫ Vol. 55

பகுதி-௭ No. 7

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1990
விகாரி—ஐப்பசி
October-1959

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உள்ளுறை

1. சிலப்பதிகார வாழ்த்துப்பாடல் — 189
நா. இராமய்யா பிள்ளை

2. தமிழ் ஒலி — 193
மு. இராமலிங்கம்

3. பதிகம் இளங்கோ யாத்ததா ? — 195
ச. ஔவையார்

4. உலகச் சமயங்கள் — 206
கி. பழநியப்பன்.

5. அவதானச் செல்வர் — 212
பாப்பு. இராமநாதன்

6. தொல்காப்பியத்திற் சில வளக்காறுகள் — 216
கு. மா. திருநாவுக்கரசு

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A., (Bar-at-Law) M. L C.
2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனுர் M. A. L. T. M. O. L. Ph. D, சென்னை.
4. திரு. பேராசிரியர், பி. சேதுமுத்து. M. A. B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
7. திரு. கி. பழநியப்பன்,
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

35821

உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி ருரு Vol. 55	திருவள்ளுவர் ஆண்டு 1990 விகாரி-ஐப்பசி 1959—October	பகுதி. எ No. 7.

சிலப்பதிகார வாழ்த்துப்பாடல்

(வித்துவான் நா. இராமய்யா பிள்ளை, எம். ஏ.,)

இளங்கோவடிகள் தம் பெருங்காப்பியத்தின் முதலில் கடவுள் வாழ்த்தென்று கூறினரா? உலகப் பொதுநூலாம் திருக்குறளில் கடவுள் வாழ்த்தென்று முதலில் உள்ளது. சங்க இலக்கியங்கள் என்று போற்றப்படும் பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்களில் கடவுள் வாழ்த்து முதலில் உள்ளது.

சங்க இலக்கியங்கள் பாடப்பட்டுப் பல நூற்றுண்டுகள் கழிந்த பின்பு. பெருந்தேவனார் என்ற பெரியாரால் கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்றுச் சேர்க்கப்பட்டது என்று அறிஞர் கூறுவர். சில அறிஞர் திருக்குறளிலும் முதல் நான்கு அதிகாரங்கள் திருவள்ளுவரால் பாடப்பட்டனவல்ல என்றும் காலத்தால் பிந்தியன என்றும் கூறுவர். ஆனல் அவை போலச் சிலப்பதிகாரத்தில் எவரும் கடவுள் வாழ்த்துப் பாடிச்சேர்க்கவில்லை. ஏன் சேர்க்கவில்லை?

இளங்கோவடிகள் தம் நூலில் பாடிச்சேர்க்க முடியாத படிச் செய்திருக்கிறார். கடவுள் வாழ்த்துப்பாடிச் சேர்ப்பார் கள் என்று ஐயங்கொண்டு அப்படிச்செய்தாரோ, இயற்கை

யாகவே அப்படி அமைந்ததோ தெரியவில்லை. (தம்நூலின் முதல் அதிகாரத்திற்குக் "கடவுள் வாழ்த்துப் பாடல்" என்று பெயர் வைக்காமல் "மங்கல வாழ்த்துப்பாடல்" என்று பெயர் வைத்தார்.) மங்கலம் என்பது திருமணச் செய்தி; அதனைக்கூறும் பாடல் என்பதால் அப்பெயர் வைத்தார் எனின், திங்கள், ஞாயிறு, மழை முதலியவற்றை ஏன் கூறவேண்டும்? "கோவலன்-கண்ணகி என இருவர் இருந்தனர்; அவர் திருமணம் நடந்தது" எனக்கூறினால் மங்கல வாழ்த்தாய்விடுமே. அவ்வாறு செய்யாதது ஏன்?

இளங்கோவடிகள் சமணர் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். சமணராய் இருந்தால் அருகதேவனை வணங்கி இருக்கலாம்; வாழ்த்துப்பாடியிருக்கலாம். ஏன் பாடவில்லை?

நாவலர் பண்டித திரு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் இளங்கோவடிகளைச் சைவர் என்பார்கள். அப்படியானால் சிவபெருமானை வணங்கியிருக்கலாம்; வாழ்த்துப்பாடியிருக்கலாம். ஏன் பாடவில்லை?

இவ்வாறு பல வினாக்களும் ஐயங்களும் எழுவதால் அதுபற்றி ஆராயவேண்டுவது கடமையாகின்றது. இளங்கோவடிகள் கடவுளை வெறுத்தவரில்லை என்று தெரிகிறது. தம்நூலில் எல்லாச்சமயக் கடவுளரையும் வேறுபாட்டுஎண்ணங்கொள்ளாமல் கூறுகிறார். அப்படியிருக்கத் தம்நூலில் முதலில் கடவுள் வாழ்த்து ஏன் கூறவில்லை? காரணம் காண்போம்.

இளங்கோவடிகள் சமணரோ? சைவரோ? ஆனால் அவர் ஒரு தமிழ் மகனார் என்பது மட்டும் உறுதி. ஒரு தமிழ் மகனார் தமிழ் இலக்கண அடிப்படையைப் பின்பற்றித் தாம் செய்யும் நூலை இயற்றுதல் வேண்டும். இளங்கோவடிகள் தாம் செய்த தனித்தமிழ் முதல் நூலை அந்த அடிப்படையில் செய்திருக்கிறார் என்பது கூர்ந்து நோக்குவார் காணமுடியும்.

தொல்காப்பியத்தில் உலகம் ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்று சொல்லப்படுகிறது. அவ்வுலகில் நடந்த செயல்களையே ஆதரவாகக்கொண்டு இளங்கோ தம் காப்பியத்தை அமைக்கிறாராகையால் உலகம் உண்டாகும் செய்தியை நமக்கு முதலில் காட்டுகிறார். அவற்றை வாழ்த்துப் போலவும் அமைத்துப் பாடுதல் அவர் திறமையை விளக்கி நிற்கும்.

நிலம்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
....

—தொல். பொருள். இளம்–635.

இளங்கோவடிகள் திங்கள், ஞாயிறு, மழை, புகார் என்ற நான்கையும் எடுத்துக்கூறுகிறார். அவை முறையே சோழன் வெண்குடை போலவும், திகிரி போலவும், அளி போலவும், குலம் போலவும் இருக்கின்றன என்கிறார். காணும் பொருள்களைக்கொண்டு, உணரும் பொருள்களை உணர்த்துகிறார். ஐம்பெரும் பூதங்களாலே உலகு அமைந்து இயங்குகின்றது என்பதை முன்பு கண்டோம். அவற்றுள் **திங்களை**, அது குளிர் தருதலால், காற்றெனவும், **ஞாயிற்றை**, அது வெம்மை தருதலால், எரி எனவும், **மழையை**, அது புனலாதலால், நீரெனவும், **புகாரை**, அது மண்ணாதலால் நிலமெனவும் இளங்கோவடிகள் இயம்புகின்றார், இந்நான்கும் வானவெளியிலே இயங்கும். ஆகையால் அதனையும் சேர்த்து ஐம்பெரும் பூதங்களையுணர்த்தி உலக இயக்கமும், உயிர் இயக்கமும் அவற்றை ஆட்டிவைக்கும் இறைவன் இயக்கமும் ஒருங்கே கூறினார் ஆசிரியர் என்று நாம் கொள்ளலாம். அதே சமயத்தில் சோழனின் பெருமையை ஆசிரியர் கூறியவாறாயிற்று. திங்களும், ஞாயிறும், மழையும் இல்லாவிட்டால் உலகம் இல்லை. அவையிருந்தால் உலகம் உண்டு. அப்போது அவ்வுலகை ஆள ஒரு அரசன் வேண்டும். அவனுக்கு ஒரு தலைநகரம் வேண்டும். அத்தலைநகரமே புகார்.

மற்றொரு விதமாகக் கொண்டால், திங்களும், ஞாயிறும், மழையும் செய்யும் காரியத்தை ஏற்றுக்கொள்வது நிலம், அதுவே பூம்புகார். அப்பூம்புகார் நகரில் சோழர்கள் தலைமுறை, தலைமுறையாகவிருந்து ஆண்டுவந்திருக்கின்றனர். சோழர் குலம் தோன்றிய நாள்முதல் புகார் நகரமும் தோன்றி நிலைபெற்று வந்ததால் சோழர்களைப்போல் புகார் நகரமும் பாராட்டுப்பெற வேண்டியதாகும். எனவே இளங்கோவடிகள் புகாரையும் போற்றுகிறார்.

சிலப்பதிகார ஆசிரியர் கடவுள் இல்லை என்னும் நாத்திகர் அல்லர். பத்தாம் காதையில் அருகன் தன்மைகளைக் கூறுவர்; பன்னிரண்டாம் காதையில் சிவபெருமான் தன்மைகளைக் காட்டுவர்; ஆய்ச்சியர் குரவையில் திருமாலின் சீரெல்லாம் புகல்வர். எனவே அவர் கடவுளைப்பற்றி அறிந்தவரேயாவர்.

இனி, தொல்காப்பியர் கூறும்—

வழிபடு தெய்வம் நிற்புறம் காப்ப
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்து

—தொல். பொருள் இளம்-415.

கூறினாரில்லை இளங்கோ. ஏன்? சிலப்பதிகாரம் மக்கள் காப்பியமாகலின் என்க. மக்கள் காப்பியத்தில் மக்கள் வாழும் உலகைக்கூறி, அவர் வாழ்க்கை முதலியவற்றைக் கூறுதல் மரபென்க, அது மங்கலமாக இருக்கவேண்டும் என்று விரும்புவதும் இயற்கையேயாகும்.

எனவே தமிழ்ப்பெருமகனார் தம் காப்பியத்தைத் தமிழ் இலக்கண அடிப்படையில் அமைத்தார் என்பதை நாம் கண்டு மகிழ்ந்து, அவரைப் போற்றுதல் வேண்டும். தொல்காப்பியத்தின் நுணுக்கத்தைத் தம்நூலிலே அமைத்தார் என்பதை நாம் காணுந்தோறுங் காணுந்தோறும் இளங்கோவடிகளின் இலக்கணப் புலமையும், ஈடுபாடும், மரபுநிலை திரியாமாட்சியும் நமக்கு நன்கு விளங்கும்.

இளங்கோவடிகள் விசும்பைவிட்டு நான்கு பூதங்களைக் கூறுகின்றார். புத்தர்கள் விசும்பை ஒப்புக்கொள்வதில்லையாம். மற்றைய நான்கு பூதங்களையே ஒப்புக்கொள்வார்களாம். அப்படியானால் விசும்பை நீக்கிக்கூறிய இளங்கோவடிகளைப் புத்தமதத்தினர் என்று கூறலாமா? இப்படியே ஆராய்ச்சி போகுமானால் முடிவு காண முடியாது.

ஆராய்ச்சிகள் பலவழிகளில் செல்ல இடந்தந்து ஒருவரையொருவர் மறுத்தும் ஆதரித்தும், உரைகளும் கட்டுரைகளும், நிகழ்த்தியும் எழுதியும் வருவதைக் காட்டிலும், இளங்கோவடிகளைத் தமிழ்மகனார் என்று கொண்டு, தொல்காப்பிய இலக்கண அடிப்படையில் தம் நூலை இயற்றித் தமிழ் மக்களுக்கு அருளினார் என்று கண்டு மகிழ்வது ஏற்புடையதோடு மறுக்க முடியாததொன்றாகும்.

தமிழ் ஒலி

பண்டித. மு. இராமலிங்கம் B. A.,

தமிழொலி தனித்தன்மை வாய்ந்தது; தமிழ்வழி இன்னது என்பதை உணர்த்துவது; தமிழின் இயல்பை எடுத்துணர்த்துவதுடன் தமிழரின் இயற்கைப் பண்பையும் இனிது புலப்படுத்துவது. எனவே அதனைப்பற்றி இக் கட்டுரையில் ஓரளவு குறிப்பிட முயல்வோம்.

ஆங்கில நாட்டினரும் வட ஐரோப்பியரும் இலத்தீன், கிரீக்கு என்ற இரண்டு தென்மொழிகளைக் கற்றனர். காரணம் சிந்தனையாளரும் செயலாளரும் அந்நாடுகளில் இருந்தமையே. சிந்தனையும் செயலும் ஒன்றுபடாமையால் அவ்விருநாட்டு நாகரிகம் அழிந்துபோக நேர்ந்தது.

நாம் சமயம் காரணமாக வடமொழி கற்ருேம். அதனுல் தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய புதியமொழிகள் நம் தமிழிலிருந்து தோன்ற நேர்ந்துவிட்டது. இன்னும் வடமொழி ஒலியை நாம் விட்டு விலகவும் விலக்கி வழங்கவும் இல்லை. இதனை நாம் எச்சரிக்கையுடன் கூர்ந்துணர்ந்து சிந்தனையும் செயலும் ஒன்றுபட்டு உயர முயலவேண்டும்.

பலர் இலக்கண அமைதியையே புறக்கணித்து மறுமலர்ச்சி என்ற வேடம் புனைந்து நடிக்கின்றனர். அதன் விளைவுதான் 'பால்ப் பண்ணை' என எழுதத் துணிவது. லகர ஒற்று தோன்றும் இடமும் வலியும் முயற்சியும் பகர ஒற்றுடன் பொருந்தவைக்கவே பாற்பண்ணை என்கிருேம். பால் பண்ணை என இயல்பாக உரைப்பினும் தவறில்லை. எனினும் ஒலி ஒட்டாது எட்டி நிற்கும்.

அயல்மொழிச்சொற்களை எடுத்தாளும்போது அம்மொழி எழுத்திலேயே எடுத்தாளுவது எம்மொழியிலுமின்மில்லை. ஆனுல் நம் மொழியில் மட்டும் ஹ, ஷ, ஜ, க்ஷ, ஸ என்ற மெய்களையும் அவற்றுடன் 12 உயிர் சேர்ந்த 60 உயிர்மெய்களையும் ஆளவேண்டும் என இன்னும் எண்ணும் இழிநிலை போகவில்லை.

தர்மம் என்பது தமிழொலி அமைதிக்கு ஏற்காது. எனவே தருமம் என்றுவது வழங்கவேண்டும், அப்படியே பக்தி முக்தி என்பன பத்தி முத்தி எனவே எழுதப்படும். ஸ்ரீ என்பதைத் திரு என வழங்குதல் வேண்டும்.

ஸ்ரீமான் = திருவாளர், ஸ்ரீமதி = திருமதி. திருவாட்டி, திருவளர் செல்வி என்பதை Miss. என்பது போல "திருவி" என வழங்கலாம். இதன் வழக்காறு கன்னிப் பெண்ணைக் குறிப்பதாக அமையும். மணந்தவர் திருமதி என வழங்கப் பெறலாம். இவ்வழக்கனைத்தும் நம்மொழியின் ஒலி குறித்தமைப்பதன்றிப் பிறமொழி வெறுப்பு என எண்ணல் தவரும்.

பதிகம் இளங்கோ யாத்ததா?

ச. ஔவையார் B. Sc.,
இந்துக்கல்லூரி, நாகர்கோவில்.

பதிகம் என்பது நூன்முகம். இக்கால முன்னுரை யெனிற் தவறில்லை. நூலுள் விரவிக் கிடக்கும் பருப் பொருளையெல்லாம் பிழிந்தெடுத்த சாற்றால் படைக்கப் படும். நுண்பொருளைப் பதிக்கத்துட் காணலாம். பதிகம் படிக்காது நூலைப் படிப்பதாற் பயனில்லை. முன்னுரை படிக்காது நூலுட்புகுவோன் முற்றத்து முல்லையை நுகராது பொழிலிடைச் சென்று மணம் நுகர்வோனே யாவன். முல்லை மணம் அறிந்திருப்பானே யாகில் சோலை மணத்தை முற்றும் நுகராவிடினும் ஒரு சிறிது நுகர முடியும். அவற்றைப் பகுத்தறிவதிலும் வருந்தவேண்டியதிராது. எனவே நூலை முடித்த பின்னரேயே பதிகம் யாக்க முடியும்.

பண்டைக்காலத்து நூற்களின் பதிகமெல்லாம் நூலியற்றியோனால் யாக்கப்படவில்லை. நூலை நன் குணர்ந்த நல்லாசிரியன் ஒருவனே பதிகம் யாப்பான். எனவேதான் பாயிரஞ்செய்வோராகத் தன்மாணாக்கரும், ஆசிரியரும், தன்னொடுகற்ற ஒருசாலை மாணாக்கரும் கூறப் படுகின்றனர்கள். ஆயின் நாட்செல்லச் செல்ல ஆக்கி யோனே பதிகம்பாடுவானானான். அதற்குக் காட்டாகச் சிந்தா மணிக்குப் பதிகம்பாடிய திருத்தக்க தேவரைக் காட்டலாம். ஆனால் கடைச்சங்க இறுதியிற் தோன்றியதாகக் கருதப் படும் சிலம்பிலும் இளங்கோவே பதிகம் பாடியிருப்பாரா என்பது ஆராயற் குரித்தேயாம்,

ஆராய்ச்சியின்றியே பதிகமும் நூலும் வெவ்வேறு காலத்துத் தோன்றியதெனக் கூறும்விதமாய் ஆடியின்

பொருளும் உருவமுமெனத் தெளிவாய்த் தோன்றுகின்றது. நூலும், பதிகமும் பொருளின் வலப்பக்கம் இடப்பக்கமாகவும், இடப்பக்கம் வலப்பக்கமாகவும் ஆடியின் உருவத்தில் தோன்றுதற் போன்று, நூலும் பதிகமும் ஒவ்வொரு கூற்றிலும் மாறுபடுகின்றது. அறிவியல் வல்லுநர் காட்டுவதற்கு முன்பு பொருளும் உருவமும் ஒன்றெனை மருள்வது போன்று, உண்மையுணர இயலாது நூலும் பதிகமும் ஒன்றென மருளவேண்டிய தாயிற்றும்.

இத்தகைய ஓர் ஆராய்ச்சியைக் கிளப்பிய பெருமை அடியார்க்குநல்லாரையே சாரும். அவர்தமது உரைப் பாயிரத்தில் பதிகம் முதலடியைக் கூறி இறுதியில் நூலின் இறுதியடியையும் கூறியுள்ளார்.

அதாவது "குணவாயில் ... ... வாழ்வீரிங்கென்" என்று எழுதியுள்ளார். ஆகவே படிப்போருக்குப் பதிகமும் அடிகள் இயற்றியதோ என்றும் மயக்கம் உண்டாகின்றதாம்.

மேற்போக்காகப் படிக்கும் ஒருவன் கூடப் பதிகமும் நூலும் ஒருவரால் இயற்றப்படவில்லை யென்பதை யுணரலாம். பதிக நடையும் நூல் நடையும் தனித்தனியாய் உள்ளன. அதுமட்டுமா? நூலுள் வரும் அடிகள் பலவற்றை அவ்விதமே எடுத்தாண்டுங்கூட ஓசையில் நூலினின்றும் வேறுபடுகின்றது.

காட்டாகக் கீழ்வரும் அடிகளைக் கூறலாம்.

'வினைவிளை கால மாதலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேரா னாகிக்'

கொலைக்களக்காதை—148-49

'கொன்றச் சிலம்பு கொணர்க வீங்கெனக்'

கொலைக்களக்காதை—153

'வாரொலி கூந்தனின் மணமகன் தன்னை
ஈரேழ் நாளகத் தெல்லை நீங்கி
வானோர் தங்கள் வடிவி னல்லதை
ஈனோர் வடிவில் காண்ட லில்லெனக்'

கட்டுரைகாதை—173-176

மேலும் இளங்கோ பதிகம் யாத்திருப்பின், நூலுள் வரும் அடிகளையே நிச்சயமாகக்கூறியிரார். அதன் பொருளைக் கூறினும் அதேயடிகளை ஒருசிறிதும் வேறுபாடின்றிக் கூற ஓர் ஆசிரியரும் நினையார். நினையினும் ஒரு சிறிதும் வேறு பாடின்றிக் கூற முடியவும் முடியா. ஏனெனில் பிறர் இயற்றியதைப் படிப்பினும் தாமியற்றியதைப் படிப்பது கடினம். அவ்விதம் மாறுபடாது வந்தாலும் மாற்றவே முயல்வார்.

இனி, பதிகத்தின் முதலிரண்டடிகளையும் பார்ப்போம்.

'குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த
குடக்கோச் சேர விளங்கோ அடிகட்கு'

என்று கூறுகிறது. இந்த அடிகளைப் படிக்கும் எவரும் அடிகளாலன்றிப் பிறரொருவராலிப்பதிகம் யாக்கப்பட்டதென்பதை நொடியில் தெரியலாம். தம்மைப்பற்றிக்கூறப் போந்த ஒருவர் 'குணவாயிற் கோட்டத்தில் அரசு துறந்திருந்த மேற்கு நாட்டின் தலைவனை-சேரனின் இளவலான அடிகட்கு' என்று நிச்சயமாகக்கூறுர். பண்டைக்கால நூலாசிரியர்கள் தங்கள் செய்திகளையோ, பெயர்களையோ கூறுவதேயில்லை. சிலம்பில் வரந்தருகாதையில் ஆக்கியோன் செய்தி கூறப்பட்டுள்ளது. ஆயினும் மேலே இரண்டடிகளும், படர்க்கையைக் குறித்து மீக்கூற்ருக யாக்கப்பட்டதென்பதை வெள்ளிடைமலையெனக் காட்டாவுள்ளது. பதிகம் முழுவதிலும் இப்படர்க்கைத் தன்மையையும் மீக்கூற்றையுங்காணலாம். தம்மைப்பற்றிக் கூறப்போந்த சேரன் இளவல் தன்மையிற் கூருது படர்க்கையிற் கூற வேண்டிய அவசியமெவனோ? தண்டமிழ்ச் சாத்தனைப்பற்றித் தன்மையிற் கூறிய இளவல் தம்மைப்பற்றிப் படர்க்கை

யில் கூறுவானேன்? தன்னைப்பற்றி உயர்வுநவிற்சியாகவும் மீக்கூற்ருகவும் கூற எவனும் விரும்பான். இக்காலத்தில் 'யாம் கூறுதும்' போன்ற தொடரைக் காண்கின்ருேமே தவிர அக்காலத்திற் காண்பதரிதாம். அதுவும் முற்றுந் துறந்த அடிகளா தம்மைத்தாமே புகழ்வது? சாத்தனுரைப் பற்றி ஒருமையிற் கூறிய அடிகட்குத் தம்மைப்பற்றி மீக் கூற்ருகக் கூறுவது பொருந்துமா? எனவே இஃது அடிக ளால் இயற்றப்பட்டதன்ரும்.

இனி, பதிகங் கூறுஞ்செய்திகளைப்பார்ப்போம். நூலுள் விரவிக் கிடக்குஞ் செய்திகளுக்கும் பதிகம் தருஞ் செய்தி களுக்கும் மலைக்கும் மடுவிற்குமுள்ள வேற்றுமை நிரம்பிக் காணப்படுகின்றது. எனவே பதிகமும் நூலுந் தம்முள் முரணுகின்றன. இவற்றை ஒவ்வொன்ருய்ப் பார்ப்போம்.

> 'குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த
> குடக்கோச்சேரல் இளங்கோ அடிகட்குக்

குன்றக் குறவர் ஒருங்குடன் கூடிக்' கூறியதாகப் பதிகம் கூறுகிறது. அடிகள் இருந்த குணவாயிற் கோட் டத்து, குன்றக்குறவர் வந்து சொன்னதாகவே கொள்ள வேண்டும். இச்செய்தி ஒப்பதில்லை. குன்றில் வாழ் குறவர்கள் அடிகளைத்தேடி, அவரிருக்குமிடம் போந்து தாங் கண்டவற்றைக் கூறுவதென்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய தாகவில்லை. மேலும் இச்செய்தி நூலுள் எங்கணும் வரவே யில்லை.

அடுத்தபடியாக, முதலிரண்டடி கூறும் யாவையும் அடிகளுக்கு அடையாக எடுத்து, அவர் பேரியாற்றின் கரை யில் இருந்துழிக் குன்றக் குறவர் கூறினர் என எடுப்போம். இது வலிந்துதான் கொள்ளவேண்டியுள்ளது. ஆனுலும் நூல் கூறுங் செய்தியோடு ஒத்து நோக்க வேண்டிக்கொள் வோம். இவ்விதம் எடுக்கும்போதும் முரண்வந்து முட்டுக் கட்டை போடுகிறது. முதற்கண் இளங்கோ பேரியாற்

றின் கரைக்குப் போனதாக நூல் கூறவில்லை. காட்சிக் காதையில்

> "வானவர் தோன்றல் வாய்வாட் கோதை
> விளங்கில வந்தி வெள்ளி மாடத்
> திளங்கோ வேண்மா ளுடனிருந்தருளி"

என்று கூறுகின்றார். இதன் பின்புதான் மலைவளங்காணும் நோக்கோடு செல்கின்றனர். இதில் வரும் இளங்கோ வேண்மாள் என்னும் செங்குட்டுவன் மனைவி பெயரை, இளங்கோ என்றும், வேண்மாள் என்றும் இரு கூறுபடுத் தினால்தான் இளங்கோவும் சென்றதாகக் கூறமுடியும். மனம்போன போக்கிற்கேற்ப ஒருவர் பெயரையே இருகூறு படுத்துதல் நன்றாகாதன்றோ? மேலும் சேரன் தனது காதல் மனையாளுடன் 'விளங்கில வந்தி வெள்ளி மாடத்' திருந்துழி, இளந்துறவிகட் கங்கு வேலையில்லையன்றோ?

மலைவளங்காணச் சென்றுழிச் சென்றால் எனக் கொள் ளின் அதுவும் தவறு. பைந்தொடியாயமோடு சென்றதாகக் கூறப்பட்டுள்ளது. அவ்விதம் இருந்திருப்பின் தன் மனை வியை நோக்கி,

> 'உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினும்
> செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்
> நன்னுதல் வியக்கு நலத்தோர் யார்?

என வினவிய செங்குட்டுவன், அவள் கூற்றைக்கேட்டுக் 'நூலறி புலவரை நோக்கி'ய செங்குட்டுவன், வில்லவன் கோதை அழும்பில்வேள் போன்றவர்களிடம் வினவாமலே விடைபெற்றசேரன், அறிவின் செல்வராம் அடிகளை நோக்கி யாதும் வினவாதிருப்பனோ? நிச்சயமாக இளங்கோ ஆங்கண் இருப்பின் அவரைப்பற்றி யாதொன்றும் வாராதிருக்குமா? என்ன? ஆகவே நிச்சயமாக இளங்கோ அங்குப் போயிருக்க மாட்டார் என்பதில் எள்ளளவும் தவறில்லை.

மேலும் குறவர் செங்குட்டுவனிடம் கூறுகின்றார்களே தவிர அடிகளிடம் கூறவேயில்லை. பதிகத்தின்படிப் பார்த்

தால் செங்குட்டுவனிடம் கூறியபின் அடிகளிடஞ் சென்று கூறியதாகக்காணலாம். நூலுள் கூருத ஒன்றைப் பதிகத்துள் இளங்கோ கூறுவாரென்பது சிறிதும் பொருந்தாது. ஆகவே இக்கூற்று நன்கு நூலைப்பயிலாத ஒருவரது படைப்பேயாகும்.

பதிகம் யாத்தவர் குணவாயிற் கோட்டத்து. அடிகளும் சாத்தனாரும் இருக்க ஆங்குச் சென்று குன்றக்குறவர் கூறினாரென அமைத்துள்ளார். நூலை நன்கு பயின்ற அடியார்க்கு நல்லாரோ நூல் கூறுஞ் செய்தியைப் பதிகத்தோடிணைக்க வேண்டி இளங்கோ பேரியாற்றின் கரையில் இருந்ததாகவே புனைந்துள்ளார். இதனை அவர் உரைநெடுகக்காணலாம்.

கண்ணகி கட்புலங்காண விட்புலம் போயதைக் கூற வந்த பதிகம்

திருமா பத்தினிக்
கமரர்க் கரசன் தமர்வந் தீண்டியவள்
காதற் கொழுநனைக் காட்டி யவளொடுங்
கட்புலங் காண விட்புலம் போய
திறம்பூது போலுமஃ தறிந்தரு ளீயெனக்

குன்றக் குறவர் கூறியதாகக் கூறுகிறது. ஆனல் நூலுள் இச்செய்தியை அடிகள் நுண்மையாய்க் கூறுகின்றார்.

"வானவர் போற்ற மன்றொடுங் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்"

என்று கூறுஞ் செய்திக்கும், பதிகத் கூறும், அமரர்க்கரசன் தமர் வந்தீண்டி கொழுநனைக்காட்டி அவளொடும் விட்புலம் போனர் என்பதற்கும், எத்துணை வேற்றுமையுள்ளது. இளங்கோ கூறும்போது கணவனொடு கூடிச்சென்ற காரிகையைக் கண்டு வானவர் போற்றினதாகக் கூறுகின்றார். ஆனல் பதிகமோ, அமரர்க்கரசன் தமர்வந்தீண்டியதாகவும் கணவனைக் காட்டியவளொடுஞ் சென்றதாகவும் கூறுகின்றது. அடிகளே கூறியிருப்பின் இத்துணை முரண் தந்து சிந்திக்கச் செய்யாரன்றே?

நூலுட் குறவர் மேற்கூறிய செய்தியைக்கூறி 'எந்நாட்டாள் கொல், யார் மகள் கொல்லோ' என ஐயப்பட்டு, செங்குட்டுவனைப் 'பன்னூறாயிரத் தாண்டு வாழியரென' வாழ்த்திப்போகின்றார்கள். ஈண்டு 'இறும்பூது போலுமஃதறிந் தருள் நீயெனக்' கூறுகின்றார்கள். அவ்விதங்கூறினும் இளங்கோ கூறப்போந்துழி, மீக்கூற்றாக 'அருள்நீயெனக்' கூறியிரார். அவர்களே 'நீயென' ஒருமையில் கூற, இவருக்கு மட்டும் பன்மை எவ்விதம் பொருந்துமோ?

பதிகம், அடுத்த அடியில்

அவனுழை இருந்த தண்டமிழ்ச் சாத்தன்
யானறி குவனது பட்டதென் றுரைப்போன்'

எனக்கூறி அவன் கூறியதையெல்லாந் தொகுத்துக் கூறுகிறது. 'அவனுழை' என்புழி அஃது இளங்கோவைத்தான் குறிக்கிறது. இதுவும் படர்க்கை இடத்தைக் குறித்து, இளங்கோ இயற்றியதன்று இப்பதிகம் என்பதற்குச் சான்று காட்டாவுள்ளது. இதற்கு உரை கூறப்புகுந்த அடியார்க்கு நல்லார் அவன் என்னும் சுட்டுப்பெயர் செங்குட்டுவனைக் குறிப்பதாகக்கூறி, நூல் கூறும் செய்திக்கும் பதிகம் கூறும் செய்திக்கும் முடிச்சுப் போடப்பார்க்கிறார். இத்துணை நேரம் வரை பதிகத்துள் வாராத சேரன் இவண் மட்டும் வருவதெப்படியோ? ஆகவே அடியார்க்கு நல்லார் உரை தவறாகவேயுள்ளது. நூலை நன்குணராதாரியற்றிய பதிகத்திற்கு உரை கூறப்போந்து அடியார்க்கு நல்லாரும் அடி தவறுகின்றார்.

முதலடியில் 'அவன்' என்று இளங்கோவைப் படர்க்கையில் குறித்து, இரண்டாமடியில் 'யானறிகுவனது' என்று சாத்தன் கூற்றைத் தன்மையிற் கூறியது வியப்பினும் வியப்பன்றோ? இளங்கோ இயற்றியிருப்பின் தம்மைத் தன்மையிலும், தண்டமிழ்ச் சாத்தனைப் படர்க்கையிலும் கூறாது இவ்விதம் முரணுகைக்கூறார். மேலுஞ் சாத்தன் இளங்கோவிடம் கூறியதாக நூலுள் வரவுமில்லை. யாண்டும் பன்மையில் மீக்கூறாக இளங்கோவைக் குறித்த

பதிக ஆசிரியர் ஈண்டு ஒருமையாகக் கூறிவிட்டார். அல்லது அடியார்க்கு நல்லார் போன்று நூற்கருத்தோடு முரணுதிருக்கச் சேரனைத்தான் குறித்தாரோ? என்னவோ?

இனி, சாத்தன் கூறும் கூற்றைப்பார்ப்போம். பதிகத்தை மட்டும் படிக்கும் ஒருவன் காப்பியத் தலைவனையும் தலைவியையும் மீக்கூற்ருக எண்ண ஏதுவில்லை. மேலும் தலைவனைப்பற்றிக் காம வயத்தாருகவும், தலைவியைப்பற்றிக் கொடியளாகவுமே எண்ணத் தலைப்படுவான். பதிகத்துள் சாத்தன், கோவலன் இறந்தது முதல் கண்ணகி கொங்கையால் மதுரையை எரித்ததுவரை கூறுகின்ருர். மேலும் வினை விளைவையும் இடையிற் காட்டி, அதற்கு விளக்கங் கூறுமுகத்தான் முற்பிறப்பிலும் வினைசெய்தோராகக்காட்டு இன்ருர். இளங்கோவே கூறியிருப்பின் நிச்சயமாக இவ்விதங் கூருர். கற்பின் செல்வியாம் கண்ணகிக்கு அடைமொழி கூடக்கூருது, அவளது சிரிய கற்பையும், கணவனைக் கள்வன் அல்லன் என்பதையும், காட்டும் வழக்குரை காதையைப்பற்றி ஒன்றும் கூருது. வறிதே பதிலும் எழுதியிரார் என்பது துணிவு. மேலும் ஒருநாட்டின் பெரும் புலவரான இளங்கோவோ அல்லது அரசனே, அரசரும் விழையுந் திருவுடைய வணிகர் மக்களது திருமணத்தை யறியாதிரார்கள். ஆகவே நூலுட் கூறுஞ்செய்திகள் ஒத்துவருகின்றன. பதிகத்துட் கூறுபவை வெறும் புனைந்துரையாகத் தோன்றுகிறன. காட்சிக் காதையில் எவ்விதம் ஏற்ற விதமாகத் தண்டமிழாசான் சாத்தன் உரைக்கின்ருன் எனப் பார்ப்போம்.

> "தீவினைச் சிலம்பு காரண மாக
> ஆய்தொடி யரிவை கணவற் குற்றதும்
> வலம்படு தானை மன்னர் முன்னர்
> சிலம்பொடு சென்ற சேயிழை வழக்கும்
> செஞ்சிலம் பெறிந்து தேவி முன்னர்
> வஞ்சினம் சாற்றிய மாபெரும் பத்தினி
> அஞ்சி லோதி அறிகெனப் பெயர்ந்து

முதிரா முலைமுகத் தெழுந்த தீயின்
மதுரை மூதூர் மாநகர் சுட்டதும்
அரிமா னேந்திய அமளிமிசை யிருந்த
திருவீழ் மார்பிற் றென்னர் கோமான்
தயங்கிணர் கோதை தன்துயர் பொறாஅன்
மயங்கினன் கொல்லென மலரடி வருடித்
தலைத்தா ணெடுமொழி தன்செவி கேளாள்
கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பொறாஅள்
மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத்
தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடினள் போல்
பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்.''

என்றுகூறிக் கண்ணகி வந்த காரணத்தைக் 'கொடுங்கோற் றன்மை இற்றெனக் காட்டுவதற் கென்றியம்பிய திறனை எண்ணும்போது மகிழ்கின்றோம். ஆனால் பதிகத்திலோ வினை விளைவையும், கண்ணகி கண்ணீரையும், அழலையுந் தான் காண்கின்றோம். பதிகம் படிப்போரை ஈர்க்க வேண்டுவதாயிருக்க வெறுக்கச் செய்யலாமோ?

மேலும் கொலைக்களக்காதையில் கோவலன்

''காவலன் றேவிக் காவதோர் காற்கணி
நீவிலை யிடுதற் காதியோ வெனக்''

கேட்பதாகக் கூறி அவனுக்குப் பெருமிதம் நல்கிய ஆசிரியர் பதிகத்துள் வெறுமனே 'ஙாட்ட' என்று கூறிச் செல்ல மாட்டார். மேலும் பொற்கொல்லன் அரசனிடம் கூறுவதாகவே

'' பண்டுதான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக்
கண்டனன் பிறனோர் கள்வன் கையென''

என்ற அடிகள் கூறுகின்றன. படிக்கும் ஒருவன் அரசனிடம் போய் இவ்விதம் கூறியதாகவே நினைக்க வேண்டியுள்ளது. இளங்கோ இவ்விதம் மயக்கம் தரும்விதங் கூறார். இரண்டாவதடியை மட்டும் அரசனிடம் கூறியதாக எடுத்தாற்கூடப் 'பிறனோர் கள்வன்' என்றதொடர் பொருந்தாது. ஆனால் இளங்கோ கொலைக்களக் காதையில்

'கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்
கல்லென் பேரூர்க் காவலர்க் கரந்தென்
சில்லைச் சிறுகுடி லகத்திருந் தோனெனத்'

தெளிவாய்க் கூறுகின்றார். ஆகவே பதிக அடிகளை இளங்கோ ஒருபோதும் கூறியிரார். இது மட்டுமா? கொலைக் களக்காதையில் 'கன்றிய கள்வன்' என்ற ஆசிரியர் பதிகத்துள் 'கன்றிய காவலர்' என்று மறந்தும் கூறார் என்பது உறுதி. ஆகவே ஈண்டும் ஆண்டுக் கூறியதுபோல் 'ஊர்க்காப்பாளர்' என்று கூறியிருப்பார்.

'வினை விளைவென்ன விறலோய் கேட்டி' என்னும் தொடரில் தரும் விறலோய் என்பது படர்க்கையைக் குறிப்பதோடு தம்மைத்தாமே உயர்த்தியும் கூறப்பட்டுள்ளது. இதுவும் அடிகள் பதிகம் இயற்றவில்லை என்பதற்கு அரணாகும்.

'வெள்ளியம்பலத்து நள்ளிருட் கிடந்தேன்' எனச் சாத்தனார் கூறுவதாகப் பதிகம் கூறுகின்றது. 'கிடந்தேன்' எனத் தன்மையிற் கூறியிருப்பதும், மேலும் இச்செய்தி காட்சிக்காதையிற் கூறப்படாததும், அடிகள் பதிகம் செய்யவில்லை என்பதற்குக் காட்டாம். பதிகமும் நூலும் முரணும்படிப் பதிகம் யாக்கவேண்டுவதில்லை.

இன்னும் படர்க்கையைக் குறிக்குமிடம் பதிகமெங்கணும் விரவி வருவதைக் காணலாம். சாத்தனாரைக் குறிக்கும்போது 'கோட்டமில் கட்டுரை கேட்டனன் யானென' என்று தன்மையொருமையிற் கூறியுள்ளார், ஆனால் தம்மைக் குறிக்கும்போது 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்' என்றும், 'அடிகள் நீரே யருளுகென்றார்க்கவர்' என்றும் கூறியுள்ளார், எனவே தம்மைக் குறித்துழி யெல்லாம் பன்மையிலும், படர்க்கையிலும் கூறியும், தம்மோடொத்த தண்டமிழாசானை ஒருமைத் தன்மையில் கூறியும் பதிகம் யாத்ததேனோ?

பதிகத்து முதலடிகள் எவ்விதம் இளவல் யாக்கவில்லை யென்று காட்டினவோ அதே போன்று இறுதியடிகளும் இயம்புகின்றன:

"உரைசா லடிக ளருள மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்"

இந்த அடிகள் இளங்கோ கையாற்கூடப் பதிகத்தைத் தொடவில்லை என்று கழறுகின்றது. தம்மைப் புகழுமைந்த அடிகள் எனக்கூறிய இளவல் ஏன் தம்மோடொத்த சாத்தனாரை 'மதுரைக் கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்' என்று கூறவேண்டும்? எண்ணாற் பாற்ற தொன்றும். நூலுள் சாத்தனாரைத் 'தண்டமிழாசான் சாத்தன்', 'நன்னூற் புலவர்' என்றெல்லாங் கூறிய இளவல் ஈண்டு, அதுவும் தம்மைப் புகழுநித் தம்மோடொத்தவரை யொன்றும் கூறாது விட்டிரார். அதுவுமன்றி 'மதுரைக் கூலவாணிகன் சாத்தன்' என்னும் பெயர் நூலுள் எங்கனும் வரவில்லை. ஆகவே பிற்காலத்துப் புலவர் ஒருவர் மணிமேகலைக்கும் சிலம்பிற்கும் பதிகம் பாடிச் சேர்த்திருக்கலாம். இது முற்றும் முடிந்த முடிவன்று.

அவ்விதம் பதிகம் யாக்கும்போதாவது நூலை நன்குணர வேண்டாவா? அல்லது ஓரிடத்தில் அடிகளை 'அவன்' என்றும் பிற இடங்களில் மதித்தும் கூறலாமா? இளவலை மதித்தவர் ஏன் சாத்தனாரையும் மதிக்கக் கூடாது? மூன்று செய்திகளில் ஒன்றைமட்டுங்கூறிப் பின்னிரண்டையும் விவரியாததேனோ?

மேற்கூறிய காரண காரியங்களெல்லாம் சேரன்இளவல் பதிகம் பாடவில்லை என்பதோடு, நூலறியாப் புலவர் ஒருவர் குணவாயிலிலிருந்த அடிகட்குக் குன்றக்குறவர் கூறுவதாகவும், அவனுழை இருந்த சாத்தன் ஏதேதோ அறைவதாகவும் கூறி, அடியார்க்குநல்லார் வாயிலாகச் சாத்தனார் அடிகளை இகழ்ந்ததாகவும் இயம்புவித்து, அடிகளைக் குறிப்புணராதவராக அடியார்க்குநல்லார் கூறும்படி ஏவி, இறுதியில் சாத்தனார் முன்னிலையில் அடிகள் அரங்கேற்றியதாகவும் கூறியுள்ளார் என்பதையுங் காட்டுகின்றன. ஆகவே இப்பதிகத்தால் சிலம்பு மேன்மையுறுவதில்லை. ஆயினும் முக்குறிக்கோளைத் தருவதும் பதிகமே. இவ்விதம் பதிகம் யாத்தும் நன்மையே செய்துள்ளார். அவரியற்றிய பதிகத்தாலன்றோ நூலை நுணுகி ஆராய விழைகின்றோம். ஆகவே புகைநடுவில் இறைவன் இருப்பது போன்று தீமையுள்ளும் நன்மை இருப்பதை யறிகின்றோம்.

உலகச் சமயங்கள்

(இ. பழனியப்பன், மதுரை)

(188-ஆம்பக்கத் தொடர்ச்சி)

5. கிறித்துவ சமயம்:

ஆண்டவதூதர் ஒருவர் தோன்றித் தங்களுடைய பகைவர்களை வென்று அமைதியையும் இன்பத்தையும் உலகில் நிலைநாட்டுவார் என்று யூதர்கள் திடமாக நம்பியிருந்தனர். மேசையா எனக்கூறப்படும் அத்தூதரை, பெரும் அல்லல்களுக் குட்பட்ட யூதர்கள் அல்லும் பகலும் எதிர்பார்த்திருந்தனர். அதுபோழ்து டேனியல் என்ற ஒருவர் தாம் கண்ட பல விந்தையான கனவுகளை ஒரு சிறு நூலாக வெளியிட்டு அக்கனவுகளின் பொருள் மேசையா வரப்போகின்ருர் என்பதேயாகும் என்றும்கூறினர். டேனியல் கூறியதை எல்லா யூதர்களும் நம்பினர். ஆனல் மேசையா எப்பொழுது தோன்றுவார் என்பதில் மட்டும் பல வகையான கருத்துக்கள் அவர்களிடையே பரவியிருந்தன. தங்கள் நாடாகிய பாலத்தீனை ஆண்டு வந்த ரோம அரசர்களின் கொடுமை மிகுதியாகும் பொழுதெல்லாம் மேசையாவின் வரவு மிகவும் அண்மையிலுள்ளது என்று யூதர்கள் எண்ணி வந்தனர். வடக்கிலிருந்து வருவார், தெற்கிலிருந்துவருவார், மலை உச்சியில் தோன்றுவார், வானிலிருந்தே இறங்கி வருவார் என்று பலவாறு அவர்கள் மேசையாவின் வரவைப்பற்றி பேசியும் எதிர்பார்த்தும் வந்தனர். யூதர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் பொழுதெல்லாம் இதே பேச்சைத் தான் பேசிவந்தனர்.

பாலத்தீன் நாடு ரோமாபுரிப் பேரரசனை அகத்தகசீசர் ஆட்சிக்குட்பட்டிருப்பினும் அதன் தென்பகுதியாகிய சூதா நாட்டை ஏராட் என்னும் அரசன் ஆண்டுவந்தான். ஏராட் மிகக் கொடியவன். அவன் ஆட்சியும் கொடுங்கோ

லாட்சியாக இருந்தது. தானே எப்பொழுதும் யூதா நாட்டு அரசனாக இருக்கவேண்டும். மரணம்என்பதுகூடத் தன்னைப் பிரிக்கக்கூடாது என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்த ஈராட்டிற்கு, யூதர்களுக்கெல்லாம் அரசராக ஆண்டவரின் தூதரான மேசையா தோன்றப் போகின்றார் என்ற செய்தி மிகவும் வேதனையைக் கொடுத்து வந்தது. அந்நிலையில் ஒரு நாள் பாரசீக நாட்டிலிருந்து மூன்று பேரறிஞர்கள் ஈராட்டின் நகரமாகிய செருசலத்திற்கு வந்தனர். 'யூதர்களின் அரசராகப் போகும் குழந்தையொன்று இந்நாட்டில் பிறந்துள்ளது. அதைக்கண்டு வணங்கவே நாங்கள் வந்துள்ளோம். எங்குள்ளது அக்குழந்தை'யென்று மக்களை விசாரித்தனர். இச்செய்தி நாட்டு மன்னனுக்கு எட்டியதும் அவன் அம்மூவரையும் அழைத்து வரச் செய்தான்.

"பெரியோர்களே! உங்கள் கூற்று உண்மையென்பதை யாம் எப்படி அறிவோம்? நீங்கள் எவ்வாறு அக்குழந்தை இங்குப் பிறந்துளதென்று அறிந்தீர்கள்" என்றுகேட்டான் ஈராட்.

"நாங்கள் கீழ்த்திசையில் ஒளிமிக்க விண்மீன் ஒன்று தோன்றுவதைக் கண்டோம். அது எங்களுக்கு வழிகாட்டிக் கொண்டு முன்செல்ல, நாங்கள் பின்தொடர்ந்து இங்கு வந்துள்ளோம்" என்றனர்.

ஈராட் மன்னன் அக்குழந்தையைக் கண்டு அதைக் கொல்ல வேண்டுமென்று எண்ணினான். அவ்வெண்ணத்தை வெளியிட்டால் குழந்தையைக் காட்டமாட்டார்கள் என்பதும் தெரியும். ஆகவே ஒரு சூழ்ச்சி செய்தான். "பெரியோர்களே; மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தியைக் கொண்டு வந்துள்ளீர்கள். நானும் அக்குழந்தையைப் பார்த்து வணங்க ஆவலுள்ளவனாக இருக்கின்றேன். நீங்கள் குழந்தையைக் கண்டதும் தயவுசெய்து என்னிடம் வந்து சொல்லுங்கள்" என்று பணிவுடன் [illegible]க்கொண்டான்.

முப்பெரியோர்களும் மேலும் விண்மீனைத் தொடர்ந்து சென்றனர். செருசலத்திலிருந்து வெகுதூரத்திலுள்ள பெத்தல்காம் என்னும் ஊருக்குச்சென்று ஒரு வீட்டிற்கு நேராக விண்மீன் நின்றது. அச்சிறு வீட்டில் சோசப் என்ற ஒரு தச்சனும் அவள் மனைவி மேரியும் கைக்குழந்தை ஏசுவும் இருந்தனர். வீட்டினுள் சென்ற பெரியோர்கள் தாய் மேரியின் மடியிலிருந்த குழந்தையை வணங்கினர். தாங்கள் கொண்டு வந்த விலை உயர்ந்த பொருள்களை மேரியின் பாதங்களில் பரிசாக வைத்து வணங்கினர். அப்பெரியோர்கள் ஈராட்டின் சூழ்ச்சியை உணர்ந்தவர்கள். ஆகவே அவனிடம் திரும்பிச் சென்று தாம் குழந்தையைக் கண்டசெய்தியைச் சொல்லாது பெத்தல்காமை விட்டுச் சென்று விட்டனர்.

அன்றிரவு சோசப் தம்முடைய தவக்குழந்தையைக் கொல்வதற்காக ஈராட் ஆட்களைப் பெத்தல்காமிற்குஅனுப்புவதாக ஒரு தீய கனவு கண்டார். பதட்டத்துடன் எழுந்து மனைவியையும் குழந்தையையும் கூட்டிக்கொண்டு பெத்தல்காமை விட்டு எகிப்து நாட்டை நோக்கி விரைந்து சென்றார்.

ஈராட் முப்பெரியோர்களின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான். ஆனால் ஏமாற்றமே யுற்றான். அவர்கள் வரவில்லை. ஈராட் சினமும் அச்சமும் கொண்டு கொடுமை செய்யத் துணிந்தான். அக்குழந்தையைத் தேடிக் கொன்றால் தான் தன் அரசபதவி நிலைத்திருக்குமென்று எண்ணினான். குறிப்பிட்ட குழந்தையைத் தேடிப் பிடிப்பதோ முடியாத செயல். எந்தக்குழந்தையென்று ஒருவராலும் கூற முடியாது. ஆகவே மிக எளிதான ஒரு வழியை மேற்கொண்டான் கொடியோன் ஈராட். பெத்தல்காமில் உள்ள இரண்டு வயதிற்குட்பட்ட எல்லாக் குழந்தைகளையும் கொன்று குவிக்க ஈராட் ஆணையிட்டான். ஒருபாவமும் அறியாத குழந்தைகளின் குருதி பெருக்கெடுத்து நாடெங்கும் ஓடியது.

அக்கொடிய ஈராட்டையும் ஒருநாள் மரணம் ஆட்கொண்டது. அச்செய்தி யூதர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. எகிப்திலிருந்த சோசப்பும் இச்செய்தியைக் கேட்டுத்தன் சொந்த நாட்டிற்குத் திரும்பிவந்து நாசரத் என்னும் ஊரில் குடிபுகுந்தான். நாசரத் ஒரு சிறிய கிராமம். ஐம்பது கற்களுக்கப்பாலுள்ள செருசலந்தான் அதன் அண்மையிலுள்ள பெரும் நகரமாகும். நாசரத்தில் சிறுவர்கள் படிப்பதற்குப் பள்ளியோ ஆசிரியர்களோ இடையா. சோசப் தன் தச்சு வேலைகளுக்கூடே தன் மகன் ஏசுவிற்கும் பாடங்களைப் போதித்து வந்தான். பத்துக் கட்டளைகளை மனப்பாடமாகக் கற்கச் செய்தான். தாய் மேரி காலை மாலை வழிபாட்டுப் பாடல்களைக் கற்பித்து யூதர் வேதநூல்களையும் படித்துச் சொல்வாள்.

மற்ற சிறுவர்களெல்லாம் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது ஏசு மட்டும் யூதர்கோவில்களுக்குச் சென்று சமயப் பெரியார்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பார். மேசையா ஒருவர் தோன்றப் போவதையும் ஏசு கேட்டு மிகமகிழ்ந்தார். ஆண்டுதோறும் செருசலத்தில் யூதர்கோவிலில் ஒரு பெரும் விழா நடைபெறும். அவ்விழாவிற்கு நாட்டில் பல பாகங்களிலிருந்தும் ஏழைகளும் பணக்காரர்களும் வருவது வழக்கம். ஏசுவிற்குப் பன்னிரண்டு வயதாகும் பொழுது தந்தை சோசப் தம் மனைவிமக்களுடன் அவ்விழாவிற்குச் சென்றார். ஐம்பத்தைந்து கல் நடந்தே சென்றனர். பணக்காரர்கள் ஒட்டகைகளிலும் கழுதைகளிலும் ஏறிச்சென்றனர். சோசப் போன்ற ஏழைகள் நடந்துதானே செல்லமுடியும். ஆண்டவன் இருப்பிடமாகக் கருதப்பட்ட செருசலம் ஏசுவின் உள்ளத்தில் பெருங் கிளர்ச்சியைத் தூண்டிக்கொண்டிருந்தபடியால் அச்சிறுவயதில் 55 கற்கள் நடந்து செல்ல அவரால் முடிந்தது. செருசலத்தைப்பற்றி எப்படி யெப்படியோ கனவு கண்டிருந்த ஏசு அந்நகரைப் பார்த்ததும் பெரும் ஏமாற்றமடைந்தார். கோவிலை யடைந்

ததும் அதனினும் பெரிய ஏமாற்றமுற்ருர். கோவில்முன் பலியிடுவதற்கான ஆடுகளை விற்பவர்கள் கூட்டமும், வணிகர்களின் கூட்டமும், பணம் மாற்றும் லேவாதேவிக்காரர்களின் கூட்டமுமே நிறைந்திருந்தன. எங்கு நோக்கினும் தூய்மையின்மையும் ஒரே கூச்சலுமாகவே யிருந்ததே தவிர ஆண்டவன் வழிபாட்டிற்கு ஏற்ற அமைதியே காணப்படவில்லை.

விழா முடிந்து மிகவும் சோர்வுற்று வீடு திரும்பிய ஏசு மேசையா வந்துதான் இவற்றையெல்லாம் சீர்ப்படுத்த முடியும் என்ற திடமான நம்பிக்கையுடன் அவர் வரவை எதிர்பார்த்திருக்கலாஞர்.

ஏசு தச்சுவேலை செய்வதற்குக் கற்றுக்கொண்டு தாய் தந்தை தங்கை தம்பிகளுடன் எளிமையாக வாழ்க்கை நடத்திவந்தார். தந்தை சோசப் இறந்தபின் குடும்பப் பாரம் முழுவதும் ஏசுவே ஏற்றுக்கொள்ள வேண்டி யிருந்ததால் தாயார் மேரியின் ஊராகிய காஞவிற்குச் சென்று அங்குத் தச்சுத் தொழிலை நடத்திவந்தார். ஞாயிறுதோறும் கோவிலுக்குச் செல்வது; அங்குப் பலர் வேத நூல்களைப் படித்து உரையாடிக்கொண்டிருப்பதைக் கேட்பது; இவைகளை மட்டும் ஏசு விடாது கடைப்பிடித்து வந்தார். வேத நூல்களின் கருத்துக்களைக் கூட்டத்திலிருப்பவர்கள் யாரும் விளக்கிச் சொல்லலாம் என்பது அம்மக்களுடைய வழக்கம். அதன்படி ஏசு அடிக்கடி எழுந்து தமக்குத் தோன்றிய விளக்கங்களைச் சொல்வார். மற்றவர்கள் கூறுவதைவிட ஏசுவின் சொற்களும் விளக்கங்களும் தெளிவாக விருந்தபடியால் அவைகள் கேட்பவர்களின் உள்ளத்தைத் தொட்டன. அதன் காரணமாக ஏசுவைப் பலர் ‘ நம் போதகர் ’ என்று கூறத் தொடங்கினர். ஏசுவின் விளக்கங்களைப்பற்றிப் பலர் பேசுவதும் வழக்கம்.

அக்காலத்தில் சூதா நாட்டில் ஜோர்தான் நதிக்கரையில் ஓர் அபூர்வ மனிதர் இருந்தார். சான் என்னும் பெய

ருடைய அவர் 'காசுபல்' எனும் நற்செய்தியைச் சொல்ல வந்துள்ளேன். எல்லோரும் வாருங்கள்' என்று மக்களை அழைத்தார். தம்மை நாடி வருபவர்களை முதலில் சோர் தான் நதியில் முழுக்காட்டி அவர்களைத் தூய்மைப்படுத்தி நற்செய்தியைக் கூறுவர். உடல் தூய்மைப்படுவதுடன் தங்களுடைய பாவங்களும் கழுவப்படுகின்றன என்று மக்கள் நம்பினர். ஆகவே, நாடெங்கிலிருந்தும் கூட்டங்கூட்டமாக மக்கள் சானை நாடி வந்தனர். சானுடைய புகழ் காறுன் நகரையும் அடைந்தது. ஏசுவும் சானைப் பார்க்க வேண்டுமென்று விரும்பிப் புறப்பட்டார். சான் தமக்கு நெருங்கிய உறவினர் என்பதையும் தாயார் மேரி மூலம் தெரிந்துகொண்டார்.

ஏசு சானை நெருங்கியபொழுது பலர் சானைச் சூழ்ந்து கொண்டு நின்றனர். அவர்களுக்கு அப்பொழுது சான் கூறிக்கொண்டிருந்த நற்செய்தி இதுவே;

> "வருகிறார் என்னிலும் வலிமை மிக்கவர்
> அவர்தம் தாள்களின் அணிகளைத் தொடவும்
> யானோ தகுதி யாதும் அற்றவன்"

சான் அருளுரையை முடித்ததும் ஏசு அவரை அணுகித் தம்மைப் புனிதமாக்கும்படிக் கேட்டார். "நீர் என்னிடம் வருவதேன்? நானல்லவோ உம்மால் புனிதமடைய வேண்டும்" என்று சான் கூறி மறுத்தார். ஏசு மிகவும் வற்புறுத்தவே சான் அவரைப் புனித நீராட்டினார். ஏசுவிற்கு அப்பொழுது வயது முப்பதே. அன்றுமுதல் அவர் வாழ்வில் புதிய ஒளி வீசத் தொடங்கியது. —(தொடரும்)

அவதானச் செல்வர்

[வித்துவான். பாப்பு. இராமநாதன்]

இற்றைக்குச் சுமார் நூறு ஆண்டுகட்கு முன்னர் அட்டாவதானியாக விளங்கிய மீனாட்சிசுந்தரக் கவிராயர் அவர்கட்குத் திருக்குமாரராய் அங்காளம்மையாரிடம் பராபவ ஆண்டு ஆனித்திங்கள் 7-ஆம் நாள் புதன்கிழமை, மதுரை மாவட்டம் பேரையூரின்கண் வணிக மரபினரும் வித்துவானும் அட்டாவதானியுமாகிய இராமலிங்கக் கவிராயர் பிறந்தார்,

இவர் தந்தை இறந்தபின், பேரையூரின் குணதிசையிலுள்ள சாலிச்சந்தையில் வதிந்த அழகுநம்பிக் கவிராயரிடம் செவ்வனே இலக்கியம் நிகண்டு முதலியன கற்றுத் தேர்ந்தார். பின்னர் இவ்வூரின் பெருஞ்செல்வராகிய குற்றாலிங்க நாடாரின் பொருளுதவியால், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த அருப்புக்கோட்டைக்குத் தென் மேற்குத் திசைக்கண் உள்ள கூத்தி பாறையில் தம்மினும் மிக்காரும் ஒப்பாரும் இன்றி, இலக்கணப் பெருங்கடலாய் விளங்கிய முத்துக்கிருட்டிண மதுரகவி இராமானுச தமிழ்ப்பண்டிதரவர்களிடம் முறையாக ஐவகை இலக்கணங்களையும் ஐயந்திரிபின்றிக் கற்றுத் தேர்ந்தார்.

குரோதன ஆண்டு பங்குனித் திங்கள் (1926 மார்ச்சு) மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கற்கத் தொடங்கினார். இவர் ஆண்டுக் கல்வி கற்குங்கால் காசையம்பதியென விளங்கும் போடிநாயக்கனூரின் சமீன்தாராகவிருந்த டி. வி. கே. காமராசபாண்டிய நாயக்கர் பொருளுதவி செய்தார்.

இவர் பற்பலவிடங்களில் புராணச்சொற்பொழிவு செய்துள்ளார். பேரையூர், சாப்டூர், மதுரை போன்றவிடங்களில் அவதானமும் செய்துள்ளார். மன்மத ஆண்டு

வைகாசித் திங்கள் 3-ஆம் நாள் செவ்வாயன்று திருமங்கலத்திற்குத்தென்மேற்குத் திசைக்கண் உள்ள சாமி மல்லம் பட்டியில் புராணச் சொற்பொழிவு நிகழ்த்தச் சென்ற போழ்து மாரடைப்பால் திடீரெனக்காலமானார்.

இனி அவர் ஆங்காங்கே இயற்றிய செய்யுட்களில் நய மானவற்றை இப்பகுதியில் எழுதி மகிழ்விப்பதே இக்கட் டுரையின் நோக்கமாகும்.

மதுரை நகரில் உள்ள வெள்ளியம்பல மண்டபத்தில் பிரமாதி ஆண்டு கார்த்திகைத் திங்கள் 27-ஆம் நாள் செவ் வாய்க்கிழமையன்று கற்றறிந்த பெரியோர்களும், வித்து வான்களும் நிறைந்த பேரவையில் பொ. மீ. இராமலிங்கக் கவிராயர் அவதானம் நிகழ்த்தினார். அவருடைய அவ தானச் சிறப்புக் கண்ட பெரியோர்கள் பரிசும், பணமும் கொடுத்து ஆதரித்ததோடு ஊர்வலமும் நடத்திச் சிறப் பித்தார்கள்.

அவ்வவதானத்தில் தமிழ்வித்துவான் ஏரம்பையய ரென்ற பிச்சுவையரவர்கள் குன்றக்குடி முருகன் மேல் ஒரு கட்டளைக்கலித்துறை கூறும்படி வேண்டினர். உடனே கீழ்வரும் செய்யுளைச் சொன்னார்கள்.

> "கொண்டல் பொழிந்த வள்மேவு குன்றக் குடியில்வளர்
> எண்டிசை போற்று முருகேசன் பாத மிறைஞ்சினர்க்குத்
> தண்டாத செல்வம் குறையாத வாழ்வு தழைத்தலொடு
> அண்டாது வெய்ய வினையாவு மோடி யகன்றிடுமே.

இச்செய்யுளைக் கூறியபோது சிறுதூறல் பெய்தது. அப்பொழுது குன்றக்குடியிலும் மழை பெய்துள்ளது என் றார் கவிஞர். அவையோர் வியப்பெய்தி, குன்றக்குடிக்குத் தொலைபேசி மூலம் கேட்டனர். அவர்களும் பெய்ததாக விடையிறுத்தனர். இச்செய்தி அவையெங்கும் பரவியதால் வானதிர, கையொலி எழுப்பி ஆரவாரம் செய்தனர்.

இராமலிங்கக் கவிஞர் விரைந்து செய்யுள் பாடுவதில் மிக வல்லுநர். இவர் தம் இலக்கண ஆற்றல் உடன்உறைந்து

பழகியவர்க்கே நன்குபுலனும். இத்தகைய புலவர்பெருமான், ஆங்காங்கே பாடிய பாடல்கள் பலவுள. அவற்றுள், துதிப் பாடல்கள், குதிரையடி வெண்பா, கொம்பிலா வெண்பா, சமர்த்தி எனப் பலவகை உள்ளன. சமர்த்தி என்பது ஈற் றடியை ஒருவர் கூற ,பிற அடிகளைக் கூறிப் பொருள் பொருத்தமுறச்செய்யுள் செய்வதாம்.

''தனங்கரங்கொண் டான்கமலத் தாள்'' —என்ற வடியை ஈற்றடியாகக்கொண்டு சிவன், நான்முகன், கண் ணன், ஆகிய முத்தெய்வங்களின் மேல் நான்கு செய்யுள் பாடியுள்ளனர்.

அவை வருமாறு:—

"வாக்கிற் கலைவாணி வந்துவள ரச்செய்யும்
ஆக்கமொடு ஞான மதையளிக்கும் — நோக்கி
வனநடித்தான் செந்தா மரைமலர்வே தன்வ
தனங்காங்கொண் டான்கமலத் தாள்"

ஆராய்ந்து, அழகுடன் நடமாடியவன்; செந்தாமரை மலர்க்கண் உதித்த பிரமனுடைய முகத்தைக்கையில் கொண்டவன்; அவனுடைய மலர் போலும் திருவடிகள், நாவில் கலைமகள் அருள்வளரும்படிச்செய்யும்; செல்வத்தை யும், ஞானத்தையும் அளிக்கும்.

''தொல்லைவினை யாவி தொலைக்கு மருந்தமிழை
வல்லைதனி லெற்கே வருத்திவைக்கும்—கல்லாங்
வனத்தான் குமரன்பால் வார்பிரித் தேமாந்
தனங்காங்கொண் டான்கமலத் தாள்''

குறிஞ்சி நிலக்கடவுளான முருகனிடம் நெறி தவறி, அதனல் ஏமாற்றமுற்று, அன்னப்புள்ளைக் கையிலே கொண்டவனாகிய பிரமதேவனின் செந்தாமரை மலர் போன்ற திருவடிகள் பழைமையாகிய, உயிரை வருத்து கின்ற தீயவினைகளை அகற்றும் உயர் சக்தி வாய்ந்த சிறந்த தமிழை விரைவில் எனக்குக் கற்றுக் கொடுக்கும். செந்

தமிழை, "தொல்வினை யாவி தொலைக்கும் அருந்தமிழ் எனக் கூறிய கூற்றினால் நம் கவிஞர் தமிழின்பால் கொண்டுள்ள பற்றுள்ளமும், மதிப்பும் தெற்றென விளங்குகின்றனவன்றோ?

"உள்ளக் கவலை யொழிக்குந் திருப்போத
வெள்ளத் தமிழை விருத்திசெயும்—கள்ளார்
வனங்கமழ்வோன் சத்தியபா மைக்கே முனநந்
தனங்கரங்கொண் டான்கமலத் தாள்"

தேனிறைந்த வனத்திலுள்ள மலர்களின் நறுமணம் கமழ்பவனாகிய திருமால், சத்தியபாமைக்காக, அஞ்ஞான்று பாரிசாதமலர் வனத்தைக் கரத்திலே கொணர்ந்தவன்; அன்னோன் செந்தாமரை மலர் போன்ற திருவடிகள், தொண்டர்களின் அகத்துறையுங்கவலையை நீக்கும். "தனக்குவமை—இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்—மனக் கவலை மாற்ற லரிது" (குறள்) என்பதை ஒப்பிடுக. கவிஞர் "திருப்போத வெள்ளத் தமிழ்"—எனத் தமிழைச் சிறப்பித்தமை காண்க. "ஞானத் தமிழ்—புரிந்த நான்"—எனக் கூறியமையும் ஈண்டு ஒப்பு நோக்குக.

"பாவசம்பந் தந்துயரைப் பற்றறுக்குஞ் செந்தமிழ்ச்ச
பாவசம்பண் ணித்தருங்கோ பாலர்செய்சம்—பாவ
சனங்குறைவின் றேயருந்திச் சாலவுயர் கோவர்த்
தனங்கரங்கொண் டான்கமலத் தாள்"

ஆவின மேய்க்கும் அத்தனை மக்களும் வறுமையின்றி உண்டு மிக உயர்ந்த கோவர்த்தனகிரியைக்கரத்தே குடையாகக் கொண்டவனின் தாள், தீய செயல் தொடர்பான பற்றினைநீக்கும்; செந்தமிழ் கற்ற புலவரவையில் மிக்க மேன்மையுடன் திகழும் நனி சிறப்பினையும் நல்கும்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" (குறள்)

தன் மைந்தனைக்கற்றார் குழாத்துட்சேர்த்துச் சிறப்புப் பெறும்படிச்செய்யும் ஆற்றல் தந்தைக்குண்டு. தந்தையே உரிமையுடையவன். அத்துணை உரிமையுடையது தமிழ். அதனைச் "செந்தமிழ்ச் சபாவசம் பண்ணி" —என்னும் தொடரால் நன்கு விளக்கியுள்ளார்.

"தந்தை மகற்காற்றும் நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்" (குறள் சு எ)

அவர் தமிழுக்குக் கொடுத்துள்ள அடைமொழிகளான், தமிழார்வமும், அதனையறிந்துள்ள ஆழ்ந்த கருத்தும் கூறாதே இனிதமையும்.

தொல்காப்பியத்திற் சில வழக்காறுகள்

(வித்துவான். கு. மா. திருநாவுக்கரசு)

நந் தமிழ் மொழியின் இலக்கண நூல்களுள் மிகவும் தொன்மை வாய்ந்தது தொல்காப்பியம் என்பது யாவரும் அறிந்த தொன்றும். தொல்காப்பியர் காலத்தில் நந்தமிழ் முன்னோர்கள் தத்தங் கருத்துக்களை மற்றவருக்குப் புலப் படுத்துவதற்காக வழங்கிய வழக்காறுகள் பலவற்றை அவ ருடைய நூலால் அறிகின்றோம். அவர் தமது நூலை எழுத்து, சொல், பொருள் என மூவகைப்படுத்தி எழுதியுள்ளார். அவற்றுள் முதற்கண்ணதாகிய எழுத்ததிகாரத்தில் பலவழக் காறுகள் அறியக் கிடக்கின்றன. நூலாசிரியர் சிறப்பாக விதந்து கூறியன போக, உரையாசிரியர்கள் பல வழக்காறு களை எடுத்தாண்டுள்ளார்கள். அவற்றை முறைப் படுத்திக் கூற எண்ணியுள்ளேன். நந்தமிழன்பர்கள் அவற் றைக் கண்டு அவற்றில் எவை வழக்கிலுள்ளன? எவை வழக் கிறந்தன? என உய்த்துணர்வார்களாக.

முதலில், அவர்காலத்து வழங்கிய சுட்டு, வினா- ஆகிய வற்றைக் காண்போம்.

அவர்காலத்தில் தமிழில் வழங்கிய சுட்டெழுத்துக்கள் மூன்று என்பதை,

'அ இ உ அம் மூன்றுஞ்சுட்டு' என்னும் நூற்பாவால் அறிக. வினவெழுத்துக்களும் மூன்று என்பதை,

'ஆ எ ஒ அம் மூன்றும் வின' என்னும் நூற்பா வுணர்த்து கின்றது. ஆனல்,

தொல்காப்பியர், தமது நூலில் — 'யாவென் வினவும் ஆயியல் திரியாது' (உருபி 176) என்றும்,

எகர முதல் வினாவினிகரவிறுதி........(தொகை-160) என்றும் கூறி, உடம்பொடு புணர்த்தலால் யாவினாவும், எகர வினாவும் வழங்கினவாகக் கொள்கின்றார்.

எனவே, அவர்காலத்து வழங்கிய சுட்டெழுத்துக்கள் மூன்று என்பதும், வினாவெழுத்துக்கள் ஐந்து என்பதும் பெற்றாம்.

இனி, சுட்டு, வினா இவற்றின் அடியாகப் பிறந்த பெயர்களைக் காண்போம்.

சுட்டுப் பெயர்கள்

1. அ, இ, உ [இம்மூன்றும் தனித்துநின்று சுட்டுப் பொருளையுணர்த்துவன] = அ + அன் = அவன் முதலியன அ + கொற்றன் = அக்கொற்றன் (205)
2. சுட்டு முதலுகரம் = அது, இது, உது (177, 278, 279, 264.)
3. சுட்டுமுதலாகிய ஆய்த விறுதி. = அஃது, இஃது, உஃது (201, 423 மு 425.)
4. சுட்டு முதல் வகரம் = அவ், இவ், உவ் (184, 329 மு 382.)
5. சுட்டு முதலாகிய ஐயென்னிறுதி = அவை, இவை, உவை (178, 282)
6. சுட்டு முதலாகிய இகர விறுதி. = (1) அதோளி, இதோளி, உதோளி (160) (2) அவ்வழி, இவ்வழி, உவ்வழி (160)
7. சுட்டுச்சினை நீடிய ஐயென்னிறுதி = (1) ஆண்டை, ஈண்டை, ஊண்டை (160) (2) ✻ஆங்கவை, ஈங்கவை, ஊங்கவை (160)
8. சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழி = ஆங்கு, ஈங்கு, ஊங்கு (428, 429)
9. சுட்டுமுதலாகிய மென்றொடர் மொழி = அங்கு, இங்கு, உங்கு (430)
10. சுட்டு முதல்வயின் (மொழி) = அவ்வயின், இவ்வயின், உவ்வயின் (335)

✻ இங்கு, நச்சர் ஆங்கவை முதலியன திரிபுடையன எனக்கொண்டு இவற்றைக் கொள்ளாமல், இவை வழக்கிறந்தன எனக் கூறுகின்றார்,

உரையாசிரியர்கள் காட்டும் சுட்டுப் பெயர்கள்.

1. அங்கா, இங்கா, உங்கா (232)
2. அவண், இவண், உவண்.
3. அங்கண், இங்கண், உங்கண் (308)
4. ஆங்கண், ஈங்கண், ஊங்கண்,
5. அவ்வாய், இவ்வாய், உவ்வாய் (362)
6. அம்பர், இம்பர், உம்பர். (406)
7. அக்கால், இக்கால், உக்கால் (369)
8. அதோள், இதோள், உதோள். (399)
9. ஊன் என்னும் சுட்டுப்பெயர் (334)
10. அன்று இன்று என்னும் சுட்டுப்பெயர்கள் (336)

[அ என்னும் சுட்டு அன்றி யனைத்தும் எனத் திரிந்து வரும் என்பர் நச்சர்]

வினுப் பெயர்கள்

1. யாவென்வினு = யா. (176, 225)
2. யாதென்னிறுதி = யாது. (201, 423)
3. யாவென் வினுவின் ஐயென்னிறுதி = (1) யாவை (179) (2) யாண்டை (160) (3) யாங்கவை (160)
4. யாவின் முதலிய மென்றொடர் மொழி = யாங்கு (429)
5. எகர முதல் வினுவி னிகர விறுதி = (1) எதோளி (2) எவ்வழி 160
6. எகர முதல் வயின் (மொழி) = எவ்வயின் 335
7. வினுமுதலாகிய மென்றொடர்மொழி = எங்கு 430
8. தன் தொழிலுரைக்கும் வினு (ஆகார வீற்றிடைச்சொல்) = உண்கா[1] 225

1. உண்கா = உண்பேனே என்னும் பொருட்டு.

9. ஏகாரவீற்று (இடைச்சொல்) வினா = நீயே வந்தாய் 276

10. ஓகார வீற்று (இடைச்சொல்) வினா = யானோ (கொண்டேன்) 291

உரையாசிரியர்கள் காட்டுவன +

1. எங்கா (232)
2. எவன்[1] } (194)
3. என் }
4. எவ்வாய் (362)
5. எம்பர் (406)
6. எக்கால் (369)
7. எதோள் (399)
8. எவண் }
9. எங்கள் } (307-நச்)
10. யாங்கள் }

இனி, அவர் காலத்து வழங்கிய மரப்பெயர்களை (எழுத்ததிகாரத்தின் மூலம்) காண்போம்,

உயிரீற்று மரப்பெயர்கள்

1. அகரவீற்று மரப்பெயர்கள் = விள × (218)
அத × (217-நச்)

2. ஆகார வீற்று ,, = பலா × (227)
யா }
பிடா } (230, 232)
தளா }
மா }

1. எவன் என்ற வினாவை நூலாசிரியர் சொல்-வினையியல் 219-ஆம் நூற்பாவில் 'அஃறிணை அஃறிணைக்கே யுரியதாகக்) கூறியதையும் காண்க.

\+ இவை புறனடை மூலம் எடுத்தாளப் படுகின்றன.

× இவை உரையாசிரியர்கள் கூறுவன.

3.	இகரவீற்று மரப்பெயர்கள்	=	உதி	(244)
			புளி	(245)
4.	உகரவீற்று ,,	=	ஒடு	(263)
5.	ஏகார வீற்று ,,	=	சே	(279)
6.	ஐகார வீற்று ,,	=	விசை ஞெமை நமை	(283)
			பனை அரை ஆவிரை	(284)

புள்ளியீற்று மரப்பெயர்கள்

1.	ணகர வீற்று மரப்பெயர்கள்	ஆண்	(305)
2.	மகர வீற்று ,,	இல்லம்	(314)
3.	னகர வீற்று ,,	எகின்	(337)
4.	ரகர வீற்று ,,	ஆர் வெதிர் சார் பீர் ×	(364)
5.	லகர வீற்று ,,	பூல் வேல் ஆல்	(376)
6.	ழகர வீற்று ,,	குமிழ்	(387)
7.	+ குற்றியலுகர வீற்று ,,	தேக்கு வேம்பு குருந்து புன்கு	(416, 7)

× இதனை நச்சர் கொடி என்று கூறுவர்.

+ இவையாவும் உரையாசிரியர்களால் கூறப்படும் பெயர்கள்.

(தொடரும்)

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரு.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கனுநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக்கட்டளை	—	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2–வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத் தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4·50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A., Bar-at-law, M. L. C.) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.